யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 19 புதன்கிழமை (04-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 200

# தமிழ் கட்சிகளை அழைத்து அமெரிக்கத் தூதுவர் பேச்சு!

## அரசியல் நிலைப்பாட்டை கேட்டறிந்தாராம்

கொழும்பு, செப்ரெம்பர் 04

ஐந்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் பீற்றர் பேர்லி நேற்று அமெரிக்கத் தூதரகத்துக்கு அழைத்து அக்கட்சிகளின் அரசியல் நிலைப்பாடு குறித்து நேரில் கேட்டறிந்தார்.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, ஈரோஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகளையே அமெரிக்க தூதுவர் அழைத்துப் பேசினார்.

தற்போதைய வடக்கு — கிழக்கு அரசியல் நிலைவரம் தொடர்பாக ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஏற்கனவே கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் ஸ்தானிகர்கள் ஆகியோரைச் சந்தித்திருந்தன.

அந்தச் சந்திப்புக்களின் போது தமிழ் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தன.

ஆனால் நேற்றைய சந்திப்பு அமெரிக்க தூதுவரால் ஏற்பாடு செய்யப்பட்டதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (இ-உ-3)

## மாவுடன் உஹண கப்பல்

திருகோணமலையில்இருந்து 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் மாவுடன் 'உஹண' கப்பல் நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்தது.

இக் கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டன.

இதனால் மாவுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

## பஸ் விபத்தில் 20 பேர் பலி

கொழும்பு, செப். 4

நேற்றுக் காலை எல்ல— வெள்ளவாயா வீதியில் நிகழ்ந்த பஸ் விபத்தில் 20 பயணிகள் உயிரிழந்தனர்.

வீதியில் இருந்து விலகி 300 அடி பள்ளத்தில் பஸ் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## பாலம் தகர்ப்பு

ஏறாவூர் பொலீஸ் பிரிவின் சித்தாண்டிக்குதெற்கே உள்ள மகிழயடிப்பாலமும், ரேடியேற்றர்சேட் எனக் குறிப்பிடப்படும் குளக்கதவும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சித்தாண்டிக் கிராமத்தை சந்தனமடு ஆறு என்ற வயல் பிரதேசத்தையும் இணைக்கும் வீதியிலேயே இப்பாலம் உள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படகுக்காகக் காத்திருந்த 24பேர் பேசாலையில் கைது!

கொழும்பு. செப். 4

மன்னார் பேசாலையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதற்காக கடந்த வியாழக்கிழமை இரவு படகுக்காகக் காத்திருந்த 24 மன்னார் வாசிகள் கைது செய்யப்பட்டனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் இவர்களைக் கைது செய்து தள்ளாடி முகாமுக்கு அழைத்துச்சென்று தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகளும் அடங்குவர்.

இவர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்படவிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ 3)

## இறக்கப்படாத நிலையில் கப்பலின் 1,000 தொன் சீனி

### தட்டுப்பாடு ஓரிரு தினங்களில் நீங்கும்

யாழ்ப்பாணம், செப். 4

குடாநாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவும் அதே வேளையில் ஆயிரம் மெற்றிக் தொன் சீனி காங்கேசன்துறையில் தரித்துள்ள 'கல்யாணி', 'ரீயூனியன்' ஆகிய கப்பல்களில் உள்ளதாகவும் —

அந்தச் சீனி ஓரிரு நாள்களில் கப்பலில் இருந்து இறக்கப்பட்டுவிடும் என்றும்— செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

ஒரு கிலோ சீனி 40 ரூபாவில் இருந்து 50 ரூபா வரையில் சில இடங்களில் தற்போது விற்கப்படுகின்றது.

(இ-3)

# ஈராக் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

பக்தாத், செப் 4

ஈராக் மீது அமெரிக்கா நேற்று ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்தும்—

கனரக போர் விமானங்களில் இருந்தும் மொத்தம் 27 குறூஸ் ஏவுகணைகள் ஈராக்கின் தென் பகுதி மீது ஏவப்பட்டன.

இவற்றில் பலவற்றை வானத்தில் வைத்தே அழித்துவிட்டதாகவும்—

இதனால் உயிர்ச் சேதம் குறைந்த அளவே ஏற்பட்டது என்றும் ஈராக் அறிவித்துள்ளது.

தனது நாட்டின் வான் பரப்புக்குள் பறக்கும் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் படி ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசெய்ன் நேற்று உத்தரவிட்டார் —

ஈராக் நாட்டின் இறைமையை அமெரிக்கா மீறிவிட்டதாக இவர் குற்றம் சாட்டினார்.

ஈராக் படைகள் கடந்த வாரம் வட ஈராக்கில் உள்ள குர்டிஷ் பிராந்தியத்துக்குள் சென்று தாக்குதல் நடத்தியிருந்தன—

ஈராக்கின் இந்த நட



சதாம் ஹூசெய்ன்



பில் கிளின்டன்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து 285 பேர் வந்தனர்

வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 119 குடும்பங்களைச் சேர்ந்த 285 பேர் கப்பல் மூலம் நேற்று முன்தினம் காங்கேசன் துறைக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

அன்று மாலை 6 மணியளவில் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததால், சிலர் வீடுகளுக்கு உடன் சென்றனர். ஏனையோர் அங்கேயே தங்கிவிட்டு நேற்றுக் காலையே வீடு சென்றனர்.

கப்பலில் வந்தவர்களில் அரச ஊழியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் பெரும் அளவில் இடம்பெற்றிருந்தனர்.

(இ-3)

## சித்தாண்டி, காத்தான்குடி பகுதிகளில் சம்பவங்கள்

கொழும்பு, செப் 4

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு சித்தாண்டியில் நேற்றுமுன்தினம் மறைந்திருந்து தாக்குதல் நடத்திய படையினர் புலிகளின் குழு ஒன்றுக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தினர் என்றும் —

இச்சம்பவத்தில் நான்கு புலிகள் பலியாகியிருக்கலாம் என தெரியவருவதாகவும் —

ஒரு படையினர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

காத்தான்குடியில் பொலீஸ் சோதனை நிலைக்கு அருகில் குறித்த நேரத்தில் வெடிக்கக்கூடிய குண்டு ஒன்றை இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை செயல்இழக்கச் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தடுப்புக் காவலில் உள்ளோரும் பரீட்சை

கொழும்பு, செப். 4

தற்சமயம் நடைபெறும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 சந்தேக நபர்களும் தோற்றுகின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தெகிவளை ரயில் குண்டு வெடிப்பு சூத்திரதாரி பிடிபட்டதாக அறிவிப்பு

## செய்தியாளர்கள் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்

கொழும்பு, செப். 4

கொழும்பு தெகிவளைரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும்— விடுதலைப்புலிகள் இயக்க — உறுப்பினர் ஒருவரைத் தாங்கள் கொழும்பில் சுற்றி வளைத்துக் கைது செய்திருப்பதாகவும்—

இந்த நடவடிக்கையின் போது வேறு பல சந்தேகநபர்கள் பெருமளவு ஆயுதங்கள், வெடிப்பொருள்களுடன்கைது செய்யப்பட்டதாகவும்—

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பேச்சாளரான பிரிகேடியர் சரத்முனசிங்க அறிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமய கலாசார அலுவலகம்

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் அவரது வழமையான நடவடிக்கைகளுடன் இந்து சமய கலாசார அலுவல்கள் உதவிப் பணிப்பாளருக்கான கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கமைய இந்து சமய கலாசார பிரிவு அலுவலகம் ஒன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இவ்வலுவலகத்தை இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு எஸ். பத்மநாதன் வைபவரீதியாகத் திறந்து வைப்பார். (இ-152)


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்

(வ- து)

சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் பாவிக்கப்பட்ட அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. அளவு விவரம் கேள்விப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. சங்கத் தலைமை நிலையத்தில் வேலை நாட்களில் ரூ. 10/- செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 10 - 09 - 96 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
03 - 09 - 96 [சி/2848]

## போட்டோ பிரதி சேவை

★ சகலவிதமான அளவுகளிலும்
★ சிறிதாக்கல், பெரிதாக்கல் உட்பட போட்டோ பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## "கோல்டன் விங்"

154, நவீனசந்தை வெளிப்புறம்,
(ராணி சினிமா எதிரில்)
யாழ்ப்பாணம்.

கிளை:

R. இராசதுரை
"நியூ ஏஜென்ற்"
இருபாலை சந்தி,
கோப்பாய். (42564)

தென்மராட்சியில்

O/L வினாவிடை வகுப்புகள்

கணிதம்: திரு. கேதீஸ்வரன்
விஞ்ஞானம்: திரு. லலீசன்

மீசாலையில்:
எக்சலன் கல்வி நிலையத்தில் நடைபெறுகின்றன.

சாவகச்சேரியில்:
சிவாகி கல்வி நிலையத்தில் ஆரம்பம்
06-09-96 வெள்ளி காலை 6.30 மணி
(42553)

## நீங்கள் ஏன் அதிக கட்டணம் செலுத்த வேண்டும்?

★ நம்பிக்கையான சேவைக்கு
★ நாணயமான சேவைக்கு

கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு

## த ஸ்ருடியோவை

நாடுங்கள்

★ நியாயமான கட்டணத்தில்
★ தரமான புகைப்படங்கள்

தேசிய அடையாள அட்டை ரூ. 35/- மட்டும்
விசேட அடையாள அட்டை ரூ. 35/- மட்டும்
தபால் அ. அட்டை/ பாஸ்போர்ட் அளவு ரூ. 75/- மட்டும்.

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு புகைப்பட நிலையம்

## த ஸ்ருடியோ

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சதோசவுக்கு அருகில்)
(42539)


## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று இரவு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும். (அ)

★ ★ ★

சங்கானை கிழக்கு இலுப்பைத்தாழ் முருகன் ஆலயத்தில் இன்று காலை ஏழு மணி தொடக்கம் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. (அ)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி இன்று மு.ப. 10.15 மணிக்கு ஆரம்பமாகும்.

நாளை வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு உறியடி உற்சவம் நடைபெறும்.

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று மு.ப. 9.45 மணிக்கு நடைபெறும். தேர் உள் வீதியில்மட்டுமே திருவீதிவலம் வரும்.

ஆலய உற்சவத் திருவிழாக்கள் மு. ப. 10 மணிக்கும் நண்பகல் 1 மணிக்கும் இடையில் நடைபெற்று வருகின்றன. குறைந்த எண்ணிக்கையான பக்தர்களே திருவிழாக்களில் கலந்து கொள்கின்றனர். (அ-30-28-15)

★ ★ ★

நல்லூர் சிவன் கோவிலில் இன்று காலை 8 30 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும். (அ-30)

★ ★ ★

சாவகச்சேரி சப்பச்சி மாவடி சக்கர ஆழ்வார் ஆலயத்தில் இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும். (அ-117)

★ ★ ★

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் இன்று பி.ப. 3 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இடம் பெறும். (அ-30)

★ ★ ★

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறுகிறது. பி.ப. 5 மணிக்கு உறியடி உற்சவம் இடம் பெறும். (அ-51)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை 7 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இம் மாதம் 16 ஆம் திகதி விநாயக சதுர்த்தி அன்று சங்காபிஷேகம் நடைபெறும். (அ-71)

★ ★ ★

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

### ஆத்ம ஜோதி

அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் அமரத்துவம் அடைந்த ஓராண்டுப் பூர்த்தி விழா கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் எதிர்வரும் ஞாயிறு காலை 9.00 மணியளவில் நடைபெறும். (இ-5)


## சிவாகி கல்வி நிலையம்

சாவகச்சேரி

A/L 97, 98

புவியியல்
திரு. நித்தி
இந்துநாகரிகம்
இந்துசமயம்
ஈஸ்வரன்

வகுப்புகள் நடைபெறுகின்றன.
(42554)


# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமர் மயில்வாகனம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் மயில்வாகனம் (இளைப்பாறிய ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாயம் — விக்னேஸ்வரா வித்தியாலயம் மீசாலை) 03-09-96 அன்று காலமானார். அன்னார் நாகேஸ்வரன் (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்), நாகேஸ்வரி, அம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலாம்பிகை, சிற்றம்பலம், பாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 3-9-96இல் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சிற்றம்பலம்

மீசாலை வடக்கு,
கொடிகாமம். [42560]

## வல்லிபுரம் வேலாயுதபிள்ளை

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், 21, சேக்கிளர் றோட், கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வல்லிபுரம் வேலாயுதபிள்ளை 1996 - 09 - 01 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் — இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், நேசம்மாவின் அன்புக் கணவரும், கோமதி, ரேவதி, புவநிதி, சிவநிதி, ரகுபதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கரத்தினம், சயிலாயபிள்ளை, அருளம்மா, வள்ளிநாயகி, கதிர்காமநாதன், சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1996-09-04) புதன்கிழமை அன்னாரின் கல்கிசை இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
வ. கதிர்காமநாதன்
(சகோதரன்)
(இளைப்பாறிய கிராம சேவை உத்தியோகத்தர்)
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி (42550)

## பொன்னம்பலம் இராசலிங்கம்

(நீர்வழங்கல் பகுதி, நயினாதீவு)

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் இராசலிங்கம் நேற்று (03-09-96) காலமாகிவிட்டார்.

இவர் பரமேஸ்வரியின் (ஆசிரியை, மகா வித்தியாலயம், நயினாதீவு) அன்புக் கணவரும், திரு., திருமதி பொன்னம்பலம் (சீனியர்) தம்பதிகளின் அன்பு ஏக புத்திரனும், 1 ஆம் வட்டாரம் இராமலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கேதாரகௌரி, காலஞ்சென்ற சிவஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைராசா (இலங்கை வங்கி, மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம்), தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நயினாதீவில் நடைபெறும்.

தகவல்:
இ. துரைராசா
(மைத்துனர்)

இரத்தினம் அவனியூ,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (42565)

## யோன் கந்தையா முருகேசு

[ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்]

கொற்றை உடையார் பகுதியைச் சேர்ந்த துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட முன்னாள் மருந்துக் கலவையாளர் யோன் கந்தையா முருகேசு 31-08-96 அன்று மறுமைக்குட் பிரவேசித்தார். இவர், றோஸ் செல்லமுத்து (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நதானியேல், காலஞ்சென்ற றதினா, காலஞ்சென்ற டானியல், காலஞ்சென்ற தயாளன், எசேக்கியேல் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), யோவேல், இம்மானுவேல் ஆகியோரது அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 01-09-96 அன்று பிற்பகல் 2-00 மணிக்கு மகன் மு. எசேக்கியேல் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
மு. எசேக்கியேல் (மகன்)
[ஆதார வைத்தியசாலை ஊழியர்,
பருத்தித்துறை]
(42569)

## வைத்திலிங்கம் கோணேசபிள்ளை

புலோலி மேற்கைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் கோணேசபிள்ளை 96 - 09 - 02 ஆம் திகதி காலமானார். அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சந்திராதேவி, பத்மினிதேவி, நந்தகுமார் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், றஞ்சுதமலரின் (முதலாம் வருடம், முகாமைத்துவம்) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோ. நந்தகுமார்
(மகன்)

77, கந்தஉடையார் வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (42566)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.கவின் போட்டிக் குழுவினர் தேர்தல் ஆணையத்திடம் மனு!

## இரட்டை இலைச் சின்னத்துக்கு உரிமை கோருகின்றனர்

சென்னை, செப். 4

முன்னாள் அமைச்சர் எஸ். முத்துச்சாமி தலைமையிலான பிரிவே உண்மையான அ.தி.மு.க என்று அறிவிக்குமாறு தேர்தல் ஆணையத்தை அந்தப் பிரிவு கேட்டுள்ளது.

தங்களது அமைப்பே உண்மையான அ.தி.மு.க அமைப்பு என அங்கீகரித்து இரட்டை இலைச் சின்னத்தை தங்களுக்கே ஒதுக்க வேண்டும் என்றும் —

உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்கவிருப்பதால் இம்மாதம் 13 ஆம் திகதிக்குள் இந்த முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் — தேர்தல் ஆணையத்தை இந்தப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இந்த நிலையில் சென்னை நகர சிவில் நீதிமன்றத்திலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. கொடி, சின்னம் போன்றவற்றை அதிருப்தியாளர்கள் பயன்படுத்தாமல் தடைவிதிக்கக் கோரி அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தொடர்ந்துள்ள வழக்கில் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் அமைச்சர்கள் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், பி. குழந்தைவேலு மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். துரைசுவாமி மற்றும் 6 பேர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்,

இது சம்பந்தமாக எஸ். டி. சோமசுந்தரம், எஸ். முத்துச்சாமி, சி. அரங்கநாயகம், எஸ். கண்ணப்பன் சார்பில் மேலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எஸ். முத்துச்சாமி தலைமையிலான பிரிவே உண்மையான அ.தி.மு.க என்று தேர்தல் ஆணையத்திடம் மனுக் கொடுக்கப்பட்டு, இந்த மனு ஆணையத்தின் பரிசீலனையில் இருப்பதால் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்கத் தேவையில்லை என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## காங்கிரஸை சீரமைக்க ராவ் முயற்சி

புதுடில்லி, செப். 4

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுவதையடுத்து–

கட்சியின் தோற்றத்தைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் குறித்து மாநிலம் வாரியாக கட்சி எம். பிக்களுடன் கட்சித் தலைவர் பி.வி. நரசிம்மராவ் பேச்சு நடத்திவருகிறார்.

முதலில் ஹரியானா, பஞ்சாப் மாநில எம்.பிக்களுடன் அவர் பேச்சு நடத்தினார்.

காங்கிரஸ் தலைவர்கள் பலர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதால் கட்சிக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## முன்பிணை அனுமதிகோரி கண்ணப்பனும் மனு தாக்கல்

சென்னை, செப். 4

தமிழக முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் முன்பிணை அனுமதி கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கில் தாம் கைதுசெய்யப்படக்கூடும் என அஞ்சுவதாக அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்ட இவர் போட்டி அ.தி.மு.க வை அமைப்பதில் முக்கியமாக ஈடுபட்டிருந்தார். (இ-3)

## போலிப் பிணை உத்தரவு வழங்கி விடுதலையானவர்

### மீண்டும் கைதாகி சிறையில்

சென்னை, செப். 4

போலிப்பிணை உத்தரவைத் தயாரித்து விடுதலையான சென்னை துணைக்காவல் துறை கண்காணிப்பாளர் ஒருவரை சிறைக்கு அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு நடந்த கற்பழிப்பு சம்பவம் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்த துணைக்கண்காணிப்பாளர் மங்கல்தன்ராஜ் என்பவர், இந்த ஆண்டு ஜூன் மாதம் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பாக ஆஜராகத் தவறிய குற்றத்துக்காக சிறையில் அடைக்கப்பட்டார்.

எனினும் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியது போன்ற போலிப் பிணை உத்தரவு ஒன்றைத் தயாரித்து கடந்த ஜூலை 14 ஆம் திகதி அவர் விடுதலையானார்.

பாதிக்கப்பட்ட பெண் அவரது பிணையை ரத்துச் செய்யுமாறு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போதே அவரின் பிணை உத்தரவு போலியானது என்பது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அதன் மீதான மனுவை விசாரித்த நீதிபதி என். ஆறுமுகம் அவரை சிறைக்கு அனுப்ப உத்தர விட்டதுடன் வழக்கை மாநில குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரிக்கவும் உத்தரவிட்டார். (இ-3)

## ஹொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைப்பதில் சிரமம் ஏற்படலாம்!

### ஜப்பானில் பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவிப்பு

ரோக்கியோ, செப். 4

அடுத்த ஆண்டு ஹொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம் என்று ஜப்பானுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மல்கப்றிப்கின்ட் தெரிவித்துள்ளார்.

ஐந்து ஆசிய நாடுகளுக்கான விஜயத்தின் ஓர் அங்கமாக பிரிட்டிஷ் அமைச்சர் ஜப்பான் சென்றிருந்தார்.

இவர் ஏற்கனவே இலங்கை வந்திருந்தது தெரிந்ததே.

ஜப்பானிய பிரதமர் ஹசி மோட்டோவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போதே ஹொங்கொங் விவகாரம் குறித்து இவர் தெரிவித்தார்.

இப்படியான ஒரு நிலைமை உருவானால் சீனா குழப்பத்தை ஏற்படுத்தும் என்று தாம் நம்பவில்லை என்றும் —

எனினும் கட்டுப்பாடற்ற பொருளியல்கள் எவ்வாறு செயற்படும் என்பதை சீனா புரிந்து கொள்ளாததால் குழப்பம் அடையலாம் என்றும் இவர் கூறினார்.

## மெச்சிக்கோ வாகன விபத்து 23 பேர்பலி!

லண்டன் செப் 4

மெச்சிக்கோ நாட்டில் நெடுஞ்சாலை ஒன்றில் பஸ் ஒன்றும், லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் 23 பேர் இறந்தனர். பலர் காயமுற்றனர். (இ-3)

**உலக அரங்கில்**

## உத்தரப் பிரதேசத்தேர்தல்: பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

லக்னோ, செப். 4

உத்தரப் பிரதேச சட்டப் பேரவைக்கு நடைபெறவிருக்கும் தேர்தல்களின் போது தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாநில ஆளுநர் றொமேஸ் பண்டாரி தெரிவித்தார்.

சில சீர்குலைவு சக்திகள் வகுப்பு வாதத்தையும், ஜாதி வாதத்தையும் தூண்டி விட முயலும் என்று உளவு விசாரணை அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் முப்படை உளவு அமைப்பும், இத்தகைய சீர் குலைவு நடவடிக்கையில் ஈடுபடலாம் எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும்—

பாகிஸ்தான் இதற்காக ஆயுதங்களை வழங்குவதாகவும்— அவர் தெரிவித்தார்.

## செஞ்சிலுவை வைத்தியசாலை

செச்சின்ய போரில் காயமடைந்து உரிய மருத்துவ வசதியின்றி தவிக்கும் மக்களுக்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தலைநகர் குறொஸ்னியில் வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் இரு கால்களையும் இழந்த ஒருவர் முதல் நோயாளியாக அங்கு அனுமதிக்கப்பட்டார். [இ-3]

## தென்மராட்சி பிரதேச செயலகம் திறந்துவைப்பு

தென்மராட்சி உதவி அரச அதிபர் அலுவலகம், தென்மராட்சிபிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுசனி காலை 11 மணிக்கு சம்பிரதாய பூர்வதாக யாழ்ப்பாண அரச அதிபர் செ. பத்மநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அரச அதிபர் பிரதேச செயலக நுழைவாயில் நாடாவை வெட்டி அதனை திறந்து வைத்தார்.

தொடர்ந்து பிரதேச செயலக வளவில் நிறுவப்பட்டுள்ள 1,500 சதுர அடி கொண்ட மண்டபத்தையும் அரச அதிபர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அம்மண்டபத்தில் விழா நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை குருமார்களான — சிவஸ்ரீ. எஸ். சிதம்பரநாதக் குருக்கள், தேவஅருட்செல்வன் அடிகளார் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து யாழ். மேலதிக அரச அதிபர் எஸ். வைத்திலிங்கம், யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் எஸ். சுவாமிநாதன், யாழ்ப்பாண அரச அதிபர்- செ. பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நன்றியுரையை தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி த. மகேந்திரன் நிகழ்த்தினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதேச செயலக ஊழியர்களான திருமதி எஸ். இலங்கேஸ்வரி – செல்வி இராமலிங்கம் ஆகியோரால் தென்மராட்சிக் கீதம் இசைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் - சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சி. நடராசா, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை டாக்டர் எஸ். டேவிட் உட்பட மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் பிரதேச செயலகத்தினால் ஊனமுற்ற இவருக்கு முச்சக்கர வண்டிகள் அரச அதிபரினால் கையளிக்கப்பட்டன. மேலும் பிரதேச செயலக முன்றலில் அரச அதிபரால் ஞாபகார்த்த மரக்கன்றும் நடப்பட்டது.

## முன்னைய இடத்தில் கொல்களம் இயங்குவதற்கு அனுமதி இல்லை

### பாவனையாளர் நன்மை கருதி மாற்று ஏற்பாடு

யாழ். மாநகரசபையின் கொல்களம் 95 ஒக்டோபர் வரை பண்ணைப் பகுதியில் இயங்கியது என்றும் —

கொல்களம் தொடர்ந்து அதே இடத்தில் இயங்குவதற்கு தற்போது அனுமதி கிடைக்கவில்லை என்றும் —

பாவனையாளர்களின் நன்மை கருதி மாற்று ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் —

யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கொல்களம் இல்லாததால் மாடுகளின் கழிவுகள் வீதியில்'' என்ற தலைப்பில் 6-8-96 உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை அடுத்து வெளியிடப்பட்ட இந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ எம்மால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் தற்காலிகமாக கொல்களச் சேவை, உணவுப் பரிசோதகரின் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

★ நிரந்தர கொல்களம் தற்போது இல்லாமையினாலும், பாதுகாப்புச் சூழ்நிலைகளாலும், இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களை 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் மக்களின் பாவனைக்காகக் கட்டி வைத்தல் எனும் விதியை நடைமுறைப்படுத்தப்படமுடியாதுள்ளது.

★ மிருகக்கழிவுகளை இயன்றவரையில் செவ்வனே வெட்டிப் புதைக்கும் செயற்பாடு நடைமுறைப் படுத்தப் படுகின்றது.

ஈக்கள், கிருமிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ''கிருமிநாசனி'' பொருத்தமான இடங்களில் விசிறப்படுகின்றது.

★ குருநகர் சந்தையில் நிரந்தர இறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பொருத்தமான இடங்களில் இறைச்சி விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ மாநகரசபைப் பிரதேசத்திற்கு வெளியிலிருந்து விற்பனைக்காகக் கொண்டு வரப்படும் இறைச்சி உரிய முறையில் அறுவை செய்யப்படாததன் காரணமாக அவற்றைத் தடை செய்துள்ளோம். நுகர்வோர் விழிப்பாக இருக்குமாறு முன்னரே பத்திரிகைச் செய்திமூலம் முன்னெச்சரிக்கை செய்துள்ளோம்.

★ தற்போதைய சூழ்நிலைகளில் எம்மால் இயன்றவரை சேவைகளை ஆற்றிவருகிறோம். (இ)

## சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

வடமராட்சி செப். 4

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் வசதிகருதி சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான 1500 Watts, Briggs Stration Model உள்ள மொடல் ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: T. வீரபத்திரஐயர் முருகன் கோவிலடி கிராம்புவில், சாவகச்சேரி. (42476)

அரியாலை கண்டி வீதியில் மாம்பழம் சந்திக்கு அருகாமையில், நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: தி. கமலாதேவி இல: 172/1 கண்டிவீதி, அரியாலை. (42552)

பெற்றோல் பாவனையிலுள்ள Toyota Corola கார், C.G. 125 (Duluxe) மோட்டார் சைக்கிள், Honda Lead, ஓடுகள், கிடுகுகள், மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. சிவனடியான், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. அல்லது வைத்தியசாலை நவாலி. (சென் பீற்றர் தேவாலயம் அருகில்) (42477)

நுணாவில் / சரசாலை வீதியில் (நுணாவில் சந்தியிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில்) 18 பரப்பு காணியில் தென்னை, பலா, மா, பனை உள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.D.S. ஆனந்தம், மகிழடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (42506)

## தேவை

250/ 500 கிலோ நிறுக்கக் கூடிய Avery/ Union மேடைத் தராசு உடன் தேவை. தொடர்பு: M.L & Co 235, 237, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (42542)

## பணிப்பெண் தேவை

இரண்டு குழந்தைகள் உள்ள ஆசிரியர் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. மறு விவரங்கள் நேரில் பேசலாம். தொடர்பு: மே/ பா இல: 521, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42538)

## தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் திறப்பு ஒன்று மருதடி வீதியில் வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சோ. பிரேமச்சந்திரன் மே/பா உதயன் பணிமனையில் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (42544)

சர்வேஸ்வர ஐயர் பத்மநாபன் ஆகிய எனது 730680627 V இலக்கமுடைய அடையாள அட்டை 2-9-96 அன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியிலிருந்து நல்லூரிற்கு இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ச. பத்மநாபன், இல: 98, செட்டித் தெரு, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (42549)

## ஆங்கிலம், கணிதம்

O/L 96; ஆண்டு 8, 9, 10 மாணவர்கட்கும் தவணைப் பரீட்சையில் மிக உயர்ந்த பெறுபேறுகளுடன் சித்தியடைய அனுபவமுள்ள B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும்: 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் மேற்குவீதி) திருநெல்வேலி. [42536]

## விவாக சேவை

மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள், தகவல்கள் பரிவர்த்தனை சேவையில் மணமகன்/ மணமகளை எதிர்பார்ப்போர் ஜாதகங்கள், தகவல்களுடன் கலந்து கொள்ளலாம் (படத்துடனும்) ''சேவை நோக்கமும் நம்பகமும்'' சி.ஞானேஸ்வரன், இல: 03, யாழ். வீதி, சிறாம்பியடி (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம். (42535)

## மணமகள் தேவை

வயது 28, நட்சத்திரம் மூலம் 2 ஆம் பாதம் வெளிநாட்டில் மெக்கானிக்காக தொழில் புரியும் மணமகனுக்கு படித்த பண்புள்ள மணமகள் தேவை சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். மே/பா இல: 520, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42537)

## A/L பௌதீகவியல் 97,98

பௌதீகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் பல வருடங்களாக கற்பித்து வரும் ஆசிரியரினால் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. R. பாலசுப்பிரமணியம். B. Sc (Cey) Dip in Ed 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (42532)

---

# YARL HALL
## கல்வி நிலையம்

93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ சிங்கள வகுப்பு ★

புதிய பிரிவு ஆரம்பமாகின்றது

**07-09-96** சனி பி. ப. 1. 00 மணி

ஆசிரியர்: திரு. T. சகாதேவன் B. A. (Lond)

★ ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்

(42526)

---

# மனோகரன்
## கல்வி நிலையம்

பழனியாண்டவர் கோயிலடி, இருபாலை வீதி, கோண்டாவில்.

**G.C.E A/L 1997, 1998**

கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. விஜயசுந்தரம் |
| கணக்கியல் | — திரு. சிதம்பரநாதன் |
| வர்த்தகம் | — திரு. சிவப்பிரகாசம் |
| புள்ளிவிவரவியல் | — திரு. திரிகரன் |
| தமிழ் | — திரு. தர்மா |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — திரு. நித்தி |
| புவியியல் | — திரு. இக்னேசியஸ் |
| அரசியல் | — திரு. இளங்கோ |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. சந்திரன் |
| அளவையியல் | — செல்வி சசிகலா |

**ஆரம்பம் - 1996-09-04**

ஆண்டு 4 தொடக்கம் 11 வரையிலான வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (42561)

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். இ. யோகநாதன்
(ஆசிரியர் யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை)

பரஞ்சோதியின் உயர்வுக்காக பறந்தோடி வந்து எம்முடன் சேர்ந்து வித்தியாலயத்தின் உயர்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட நீ நேற்று முன் தினம் எம்மையெல்லாம் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு நாற்பத்திரண்டாம் அகவில் காலனுடன் சென்றாயே இது தகுமோ?, முறையோ?, தர்மந்தானோ? என்றும் உமது சேவைகள் எமது கூடத்தில் நிலைக்கட்டும், ஒலிக்கட்டும்.

உன்னை இழந்து தவிக்கும் மனைவி, மகள், பிதா, சகோதரி, உற்றார், உறவினர், பாடசாலை சமூகத்தினர் யாவருக்கும் எமது கண்ணீர் முத்துக்களைக் காணிக்கையாக்கி உன்பாதத்திலிட்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(42551)

---

# கேள்வி அறிவித்தல்

## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## நிர்மாணத் திணைக்களம்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்களப் பிரதம பொறியியலாளரினால் 1996ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11-00மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| அவசர திருத்தவேலை கோப்பாய் வைத்தியசாலை கட்டடம் I 'அ' | 500/- | 4600/- |
| அவசர திருத்த வேலை கோப்பாய் வைத்தியசாலை கட்டடம் I 'ஆ' | 500/- | 4600/- |

நிர்மாண பயிலுனர் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD)யில் 5 L அல்லது M 9 தரத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு அதாவது 10 இலட்சம் ரூபாவிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இக்கேள்விக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கேள்விப் பத்திரங்களை 1996 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத்திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்கு சமர்ப்பிக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தை நிறைவேற்றுப் பொறியியலாளர், யாழ்ப்பாண அலுவலகத்தில் வைப்புச் செய்து கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும். அத்துடன் மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு:**

கட்டடப் பொருள்கள் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு மேற்குறிப்பிட்ட வேலைகளுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள் வைத்திருப்போர் அல்லது இவற்றைக் கொள்முதல் செய்யக் கூடியவர்கள் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர்
நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். 04-09-1996.

(சி/2845)

---

# JAFFNA COLLEGE
## Institute of Technology
## VADDUKODDAI

## முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கவுள்ளன

பின்வரும் பயிற்சி நெறிகள் வட்டுக்கோட்டை நிறுவனத்தில் 16-09-1996 அன்று ஆரம்பமாகவுள்ளன.

**Technician Certificate Course**
**(English Medium)**

Automobile Technology — 1 Year

**Educational Qualification:-**
G.C.E. (O/L) with Maths and Science - S

**Craft Courses (Tamil Medium)**

1. Electrical Wiring & Installation Practice — 1 Year
(மின்னிணைப்பும், நிர்மாணமும்)
2. Welding Practice — 1 Year
(உலோக ஒட்டுவேலைப் பயிற்சி)

கல்வித் தகைமை:
க.பொ.த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம்:
ரூபா 40-00 செலுத்தி தொ. நு. கல்லூரி வட்டுக்கோட்டை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 12-09-1996**

குறிப்பு:- விண்ணப்பப் படிவத்துடனும், கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடனும் சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

**Director.**

(சி/2836)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## உணவுப் பொருள் கையிருப்பு

மழை காலம்ஆரம்பமாகப் போகின்றது. அதனால் கொழும்புக்கும் — யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நடைபெறும் சரக்குக் கப்பல் சேவை சீராக இடம்பெறுவதில் தடைகள் ஏற்படலாம். ஆகையால் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி கையிருப்பில் வைக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ பி. டி. பியின்) தலைவர் டக்ளஸ் தேவானந்தா.

கடந்த வாரம் அவரது தலைமையில் மேற்படி கட்சியின் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்தது. அப்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல கஷ்டங்களைத் தூதுக்குழு எடுத்துக் கூறியது.

அவற்றில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவுக் கையிருப்பை வைத்திருத்தலும் முக்கிய இடம் பிடித்தது.

கடந்த சில வருடங்களாக குறிப்பாக வடபகுதி மீது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்த பின்னர், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களுக்குத் தொடர்ச்சியாகப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு வந்தது.

அந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இப்போது உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் ஓரளவு கணிசமான அளவில் யாழ். குடாநாட்டில் கிடைக்கின்றன. சில பொருள்களின் விலைகள் கூட ஓரளவேனும் குறைந்து விட்டன.

எனினும் —

உணவுத் தேவையில் இப்போதுள்ள இந்த முன்னேற்ற நிலை தொடர வேண்டுமானால் —

மீண்டும் ஒரு பற்றாக்குறை நிலை உண்டாகி இடைவெளி தோன்றாமல் தவிர்க்கப்பட வேண்டுமானால் —

ஈ. பி. டி. பி. தலைவரின் யோசனையை ஏற்று அரசு உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

1990 க்கு முன்னர், யாழ். — கொழும்பு ரயில் சேவை நடைபெற்றபோது, ரயில் மூலமே யாழ்ப்பாணத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. லொறிச் சேவையும் அதற்குப் பக்கத் துணையாக இருந்தது.

அப்போதே, மழை காலத்திற்கு முன்னர் மூன்று, நான்கு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மேலதிக கையிருப்பில் (Buffer Stock) வைக்கப்படுவது வழக்கம்.

அவ்வாறிருந்தும் மழை காரணமாக ரயில்வே பாதைகள், தரைப்பாதைகளில் வெள்ளம் பாய்ந்தால், ரயில், லொறி சேவைகள் தடைப்பட்டு விடும். அதனால் சில பொருள்களுக்குப் பற்றாக்குறை உண்டாகி விலை உயர்வு ஏற்படுவது உண்டு.

மழை காலத்திற்கு முன்னரே அடிக்கடி தடைப்படும் கப்பல் சேவையை நம்பி மழை காலத்தில் உடனுக்குடன் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிக்கலாம் என்று கருதக்கூடாது.

குடாநாட்டில் மழை தொடங்க இன்னும் ஒரு சில வாரங்களே உள்ளன. எனவே மேலதிக கையிருப்புக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். அதற்கு முன்னுரிமை தேவை.

# ஒரே ஒரு வைத்தியருடன் பளை வைத்தியசாலை!

## நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் அவலம்

தென்மராட்சி, செப். 4

பளை ஆஸ்பத்திரியில் ஒரேயொரு டாக்டர் மட்டுமே பணியாற்றுகின்றார். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரிக்கு தினமும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்ற போதிலும் ஒரு டாக்டர் மட்டுமே கடமையாற்றுவதால் காலையில் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் மாலையிலேயே சிகிச்சை பெற்று வீடு திரும்பக் கூடியதாக இருக்கிறது.

இந்த ஆஸ்பத்திரியில் பணியாற்றிய டாக்டர் ஒருவர் நான்கு மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டதால் அவரின் இடத்துக்கு புதிய டாக்டர் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கடமையாற்றும் டாக்டர் அலுவலக தேவைக்காக யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கும், தாய் சேய் கிளினிக்குகளுக்கும் செல்லும் வேளைகளில் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் சிகிச்சை பெறாமல் வீடு திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரியில் முன்னர் வைத்திய அதிகாரி ஒருவரும் மூன்று உதவி வைத்திய அதிகாரிகளும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-117)

## சாந்திகம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், செப். 4

உள நலம் பாதிப்படைந்தவர்களுக்கு உள வளத்துணை புரியும் நோக்கில் யாழ்ப்பாணம் கச்சேரி — நல்லூர் வீதியில் அமைந்துள்ள சாந்திகம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

உள நலம் பாதிப்படைந்த பலர் இந்த நிலையத்துக்கு வந்து தம்மை ஆற்றுப்படுத்திச் செல்கின்றனர்.

சமீப கால இடம்பெயர்வினால் இந் நிலையம் செயற்படாத போதிலும் சில உள வள துணை பயிற்சியாளர்கள் பாதிப்படைந்தோருக்கு பருத்தித்துறையிலும் சாவகச்சேரியிலும் உளவளத்துணை புரிந்து வந்தார்கள்.

தற்போது சாந்திகம்பழைய இடத்தில் செயற்பட தொடங்கியுள்ளது.

தற்கால நிகழ்வுகள் மற்றும் நெருக்கடிகளால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## வடமராட்சிப் பகுதியில் விதை நெல் தட்டுப்பாடு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் விதை நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

இப்பிரதேசத்தில் எச் 4, முறுங்கன் ஆகிய இனங்களைச் சேர்ந்த விதை நெல் விதைக்கப்படுவதனால் இந்த இனங்களைச் சேர்ந்த விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் அம்பன் கமநல சேவை நிலையத்தைக் கேட்டுள்ளனர்.

இதே நேரத்தில் இப் பிரதேசத்தில் வயல் நிலங்கள் தற்போது பண்படுத்தப்பட்டு வருகின்றன. (இ -173)

## வவுனியாவில் தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப். 4

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் வவுனியாவில் தமிழ் விழா நடத்தப்படவுள்ளது.

இவ்விழா ஒக்ரோபர் மாதம் 12 ஆம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடைபெறும். [இ-31]

## தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம் செப். 4

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் 1995 ஆம் ஆண்டு இறுதி ஆண்டு கல்வியை முடித்துள்ள மாணவர்கள் தமது 6 மாத கால தொழிற் பயிற்சியைப் பெறுவதற்கு தொழில் நுட்ப நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெயர், முகவரி, பயிற்சி விவரங்களைப் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலரின் அனுமதி அட்டைகள் தபாலகங்களில்!

## விநியோகிக்கப்படாது தேக்கம்

தென்மராட்சி, செப்.4

கடந்த திங்களன்று ஆரம்பமான ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பல தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படாமல் தென்மராட்சிப் பகுதி அஞ்சல் அலுவலகங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பலர் வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் மாதம் நடைபெற்ற ஜி சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நூற்றுக்கணக்கான தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளும் விநியோகிக்கப்படாது பரீட்சைத் திணைக்களத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (இ-117)

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு புதிதாக 4 ஆயிரம் ஆசிரியர்

கொழும்பு, செப் 4

தமிழ்ப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆசிரியர் பற்றாக்குறை பெரும் தடையாக உள்ளது இன்னும் 6 மாதங்களில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு 4 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். 1998 ஆம் ஆண்டு இறுதிக்குள் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான மேற்கண்டவாறு மாத்தறையில் கூறினார். (இ-3)

## 'பாக்ஸ்' பாவனைக்கு வரி விதிக்க ஆலோசனை

கொழும்பு, செப் 4

பாக்ஸ் பாவனைக்கும் வரி விதிப்பது குறித்து தொலைத்தொடர்புத் திணைக்களம் பரிசீலனை செய்து வருகிறது. இப்போது பாக்ஸ் வசதியை வைத்திருப்பவர்களிடமிருந்து தொலைத் தொடர்பு திணைக்களம் கட்டணம் எதனையும் வசூலிப்பதில்லை. தொலைபேசிப் பாவனைக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பாக்ஸ் சாதனங்களைப் பயன்படுத்துவதால் 'சுமை' தாங்காமல் தொலைத்தொடர்பு இயந்திரம் பழுதடைகிறது. அதனை ஈடு செய்ய அடையாளமாக சிறு தொகையை பாக்ஸ் வசதி வைத்திருப்பவர்களிடமிருந்து அறவிடும் யோசனை ஒன்றை தொலைத் தொடர்புத் திணைக்களம் அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

பாக்ஸ் கட்டணமாக மாதம் 50 ரூபாவை அறவிடலாம் என்று இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-150)

### நாமுனை மறவோம்

மனவிருள் போக்கும் ஞானசூரியனாய்
எமதிடர் களைய எண்ணினாய்
உனவரும் செயலால் ஈங்கெமை சேர்த்து
உன்னருட் காட்சி காணச்செய்தாய்
தினமுனை வணங்க தீவினையகற்றி
திகழினப் பிரச்சினை தீர்த்தருள்வாய்
நனவிலும் கனவிலும் நாமுனை மறவோம்
நல்லையிற் கந்தா பிரணவப்பொருளே

சைவமணி சோ. க. வேலாயுதர்

### பதமருளெனப் பணிவோம்

சிந்தையி லெந்நாளும் சிறப்புடனே வீற்றிருந்த
கந்தன் கழலிணையைக் காதலுடன் கைதொழுதே
அவன்தன் அருட்காட்சி ஒய்யாரந்தனைப் போற்றிப்
பந்தவினையறுத்தே பதமருளெனப் பணிவோம்!

தொல்லை வினை தீர்க்கும் தோகைமயிற் சந்தன்
நல்லை யிலெந்நாளும் நமக்கருள் புரிந்தே எங்கள்
கல்லை யொத்த மனமும் கசிந்துருகக் காட்சி நல்கி
இல்லை யெனாது வரங்களீந்தருள் புரிந்திடுவான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் உற்சவகால சிறப்பு அம்சம்

## வங்கிக் கடன் வட்டி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், சுய வேலைவாய்ப்பைப் பெருக்கவும் கடந்த காலத்தில் வங்கிகளினால் சுயசார்புக் கடன்கள் பல்வேறு தேவைகளுக்கும் வழங்கப்பட்டன.

இக்கடன்களை இலகு தவணை முறையில் என இருபது தவணைகளில் திரும்பச் செலுத்தவேண்டும். இது வாடிக்கையாளனின் கடமை. இந்த நிபந்தனைகளுக்கு ஏற்பவே கடன் வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட கடன்களில், உதாரணமாக 10,000 ரூபா கடன்பெற்ற ஒருவர் 20 மாதத் தவணைகளில் தவணையொன்றுக்கு 602 ரூபா வீதம் வங்கிக்குச் செலுத்தவேண்டும். இதன்படி மேற்படி தொகையினைப் பெற்ற ஒருவர் 20Xரூ602/- = 12040 ரூபாவை திரும்பச் செலுத்தவேண்டும். எனவே வங்கியிலிருந்து பெற்ற முதலுக்கான வட்டி ரூபா 12,040/- — ரூபா 10,000/- = 2,040 ரூபா ஆகும். இது வாடிக்கையாளனுக்கும் வங்கிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்.

கடன்பெற்று தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்களில், அண்மைக்கால அசம்பாவிதங்களினால் தங்களது தொழிலை, தொழில் மூலதனங்களை இழந்தவர்கள் அனேகர் உள்ளனர். அத்தோடு கடன்பெற்றவர்கள் பலர் குடாநாட்டை விட்டு வெளியேயும் சென்றுள்ளனர். இவர்கள் யாவரும் மேற்படி கடனை ஒழுங்காகக் கட்டியவர்களே.

அசம்பாவிதங்களால் சில தவணைப் பணத்தினை கட்டத்தவறினார்கள் என்பதற்காகக் கடன் பெற்ற முழுப் பணத்திற்கும் அதாவது 10,000 ரூபாவுக்கும் வட்டி செலுத்துமாறு சொல்வது நியாயமாகாது. அவர் இதுவரை செலுத்தாத தவணைப்பணங்களுக்கும் இனிமேல் செலுத்த வேண்டிய தவணைப் பணங்களுக்கும் வேண்டுமானால் வட்டி கட்டச் சொல்வதில் நியாயம் உண்டு.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள், முகாமையாளர்கள் தங்கள் முடிவினை மறுபரிசீலனை செய்யவேண்டும். வாடிக்கையாளனுடைய நிலைமையினை உணரவேண்டும். அவனை துன்புறுத்தாத வகையில் கடனை மீளப்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

க. நித்தியானந்தன்

கல்வியங்காடு.

# ம.எண்ணெய் போதியளவு உண்டு; ஆனால் கூ.சங்கங்களில் இல்லை

யாழ்ப்பாணம், செப்.4

பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தில் மண்ணெண்ணெய் தாராளமாக உண்டு. ஆனால் குடாநாட்டில் உள்ள பல கூட்டுறவுச் சங்கங்களில் மண்ணெண்ணெய் கிடையாது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மண்ணெண்ணெயைப் பெற்று விநியோகிக்கத் தயங்குகின்றன என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெற்றோலியம் கூட்டுத் தாபனம் மண்ணெண்ணெயை லீற்றர் 12 ரூபா 33 சதத்துக்கு விற்பனையாளர்களுக்கு வழங்குகின்றது. இதன் விற்பனை விலை 12 ரூபா 55 சதம் என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெயை எடுத்து விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் அக்கறையற்றிருக்கும் போக்கு இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வெளியே உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமன்றி உள்ளே உள்ள சங்கங்களிலும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுப்பிட்டி, மருதங்கேணி கூட்டுறவுச்சங்கங்கள் போன்ற சில கூட்டுறவுச் சங்கங்களை விட ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும்—

இத்தகைய நிலையினால் வெளிக் கடைகளில் மண்ணெண்ணெய் லீற்றர் 30ரூபா முதல் 35ரூபா வரை விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

தெகிவளை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் குண்டு வெடிப்புச் சூத்திரதாரி எனக் கூறப்படும் ஒரு நபர் கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

றெஜினோல்ட் என்று அழைக்கப்படும் சவிரிமுத்து லோகநாதன் (வயது25) என்று தம்மைக் கூறிக்கொண்ட அந்த நபர், தாம் விடுதலைப் புலிகளின் உறுப்பினன் என்றும் தமது உறுப்புரிமை இலக்கம் 614 என்றும் அங்கு தெரிவித்தார்.

தாம் 1992 இல் கொழும்பு வந்து சேர்ந்து, சிகை அலங்கார நிலையம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டு விடுதலைப் புலிகளின் வேலையையும் அங்கு கவனித்து வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்புக்கு அனுப்பப்படும் வெடிப் பொருள்கள், ஆயுதங்கள் போன்றவற்றை மறைத்து வைப்பதே தனது முக்கிய பணியாக இருந்தது என்றும் அவர் சொன்னார்.

மூன்று குண்டுகள் அன்றைய தினம் ரயிலில் வைக்கப்பட்டதாகவும் —

அவற்றில் இரண்டு குண்டுகளே வெடித்தன என்றும் —

குண்டுகளை ரயிலில் வைத்து விட்டு தான் தெகிவளை ரயில் நிலையத்தில் இறங்கிச்சென்று விட்டதாகவும் —

அவர் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இவர் தங்கியிருந்த வீட்டில் இருந்த இரு ஆர். பி. ஜி. ஷெல்கள், ரி-56 ரக ரைபிள்- ஒன்று, 115 தோட்டாக்கள், பத்துக் கிலோ வெடிபொருள்கள், எட்டுக் கைக்குண்டுகள் ஆகியன கைப்பற்றப்பட்டதாக இராணுவம் அறிவித்தது.

தெஹிவல ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு புலிகளே காரணம் என அரசு குற்றம் சுமத்தியதும் —

ஆனால் அதை விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக மறுத்திருப்பதும் தெரிந்தவையே. (உ-3 10)

ஈராக்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை 1990 ஆம் ஆண்டு ஐ. நாவினால் ஈராக் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு முரணானது என்றும்—

ஈராக் படைகள் குர்டிஷ் பிரதேசத்தில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டிருந்தது.

அத்துடன் அமெரிக்கா, ஈராக் மீது கூட்டு நடவடிக்கை எடுப்பது குறித்தும் தனது நேச நாடுகளுடன் ஆலோசித்தும் வந்தது.

அதே சமயம் வட ஈராக்கில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறுவதாக ஈராக் ஜனாதிபதி அறிவித்தார்.

அவரது அறிவிப்பு வெளிவந்து ஒரிரு தினங்களில் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை நடத்தி உள்ளது.

ஈராக்கில் வான் எல்லைப் பாதுகாப்பு நிலையங்களை நோக்கியும் —

ஈராக்கின் மிகப் பெரிய பயிற்சித் தளத்தை நோக்கியுமே ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

வட ஈராக்கில் உள்ள குர்டிஷ் பகுதியில் ஈராக் ஆதரவு குர்டிஷ் இயக்கம் ஒன்றுக்கும் ஈராக் எதிர்ப்பு குர்டிஷ் இயக்கம் ஒன்றுக்கும் இடையில் கடந்த இரண்டு வார காலமாகச் சண்டை நடந்து வந்தது. தனது ஆதரவான இயக்கம் சார்பாகவே ஈராக் படைகள் குர்டிஷ் பிரதேசத்துக்குள் பிரவேசித்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலை ரஷ்யா கண்டித்துள்ளது.

சீனா, இந்தியா ஆகிய நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் நேச நாடுகளான பிரிட்டன், ஜப்பான், ஜேர்மனி ஆகியவை ஆதரித்துள்ளன. (இ-3)

அடுத்தமாதிரிப் பரீட்சை
(இறுதி)
05-09-96 (வியாழன்)
ஆண்டு-5
(புலமைப் பரிசில்' 96)
பரீட்சை காலை 9.15 முதல் 6 பிரிவுகளாக நடத்தப்படும்.
புதிய நாவலர் கல்வி நிலையம்
நாவலர் வீதி, ஆனைப் பந்தி யாழ்ப்பாணம்.
(42568)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## மீனவருக்கான நிவாரணம்

தென்மராட்சி, செப். 4

தென்மராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான ஜூலை மாதத்திற்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று 4 ஆம் திகதி தொடக்கம் அந்தந்தப் பகுதி ப. நோ. கூ. சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்படுமென பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். [இ-117]

## சுவர் இடிந்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 4

இடிபாடுகளுடன் காணப்பட்ட மதிற்சுவரில் ஏறிவிளையாடிய சிறுவர்களில் ஒருவர் அந்தச் சுவர் இடிந்து விழுந்ததால் படுகாயமடைந்தார்.

சுண்டுக்குளி, பாண்டியன் தாழ்வில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவநாதன் சிவசங்கர் [வயது 6] என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் [இ-15]

## கோழிக்குஞ்சுக்கு தடுப்பு மருந்து

யாழ்ப்பாணம், செப் 4

கடந்த 27 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளுக்கான 'கம்பறோ' நோய்க்கான தடுப்பு மருந்து எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய சாலையில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தடுப்பு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகஸீன் சிறைச்சாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே இவர்கள் தோற்றுகின்றனர்.

இவர்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, களுத்துறை, கொழும்பு மகஸீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர். (இ-3)

## வாழ்க்கைச் செலவு குறித்து விசேட செயற்குழு ஆராயும்

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, அரசாங்கத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராய பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர் வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நவம்பர் மாதம் 6 ஆம் திகதி பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மூன்றாவது வரவு- செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதால் அரசாங்கத்தின் எதிர்கால பொருளாதாரக் கொள்கைகள் குறித்து மேற்படி விசேட செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும். (இ-3)

### தவறவிடப்பட்ட

## அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில்

### உரியவர் நேரில் சென்று பெறலாம்

யாழ்ப்பாணம், செப். 4

குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு காலங்களிலும் உரிமையாளர்களால் தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் ஒரு தொகுதி பற்றிய விவரங்களை யாழ். செயலகம் வெளியிட்டுள்ளது.

இந்த அடையாள அட்டைகளுக்கு உரியவர்கள் யாழ். செயலக பொதுமக்கள் தொடர்பு அதிகாரியைச் சந்தித்து அடையாளங்களைத் தெரிவித்து தமது அடையாள அட்டைகளைப் பெறலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகளின் விவரம் வருமாறு:-

★ 713661140 V — துரைராசா முருகதாஸ் — 1 ம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை.

★ 721412679 V — மார்செலின் பிரான்சிஸ் சேவியர் — புங்குடுதீவு - 12.

★ 442640289 V — ஏரம்பு தவநாயகம் — 168, அல்லைப்பிட்டி.

★ 442802335 V — கோபாலகிருஸ்ணன் இராமகிருஸ்ணன் — பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி

★ 642521837 V — ஐயாத்துரை சண்முகம் — கிளாலி

★ 387400095 V — ஜெயராசா பரமேஸ்வரி — 37/6, வித்தியாலயம் வீதி, திருகோணமலை.

★ 502750461 V — இரத்தினசிங்கம் தியாகராசா — வேலணை கிழக்கு.

★ 587281260 V — அருணாசலம் கமலாதேவி —சவேரியார் வீதி, நல்லூர்.

★ 750012027 V — சிங்கராயர் ஜோசப் — கச்சாய், சாவகச்சேரி.

★ 112300139 V — மரியாம்பிள்ளை சின்னத்தம்பி — முதலியார் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

★ 516310600 V — இராசேஸ்வரி முருகேசு — விளானை, காரைநகர் கிழக்கு.

★ 446152294 X — ஜீவரத்தினம் மகாலிங்கம் — கட்டுவன், வலிகாமம் வடக்கு.

★ 480170407 V — கணபதிப்பிள்ளை யோகநாதன்— 64, கடை வீதி, வவுனியா.

★ 757252392 V — ராதிகா ரட்ணசிங்கம் — ஞாபகார்த்த ஒழுங்கை, மானிப்பாய்.

★ 232630523 V— ஜோண் சின்னராசா மத்தேசு — அடைக்கல நாயகி வீதி, உயரப்புலம்.

★ 757372347 V — கந்தசாமி தயாளினி — கட்டுவன் தெற்கு, தெல்லிப்பளை.

★ 295080876 V — பார்வதியம்மை செல்லையாபிள்ளை — கந்தவனம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

★ 583183221 V — செல்லையா கணேஸ்வரன் —தாமரைக்குளம், நெடுங்கண்டல்,

★ 211320060 V — மயில்வாகனம் துரைச்சாமி — மைலிட்டி வடக்கு, வலிகாமம் வடக்கு.

★ 593224112 V — சுப்பிரமணியம் கணேசன் — கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ 680592659 V —மதியாபரணம் மதிரூபன் — குளக்கரை ஒழுங்கை, கொக்குவில்.

★ 125860087 V — சின்னத்தங்கம் கந்தையா — கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், வலி-வடக்கு.

★ 495082873V — செல்வராணி ஆறுமுகம்—சரவணை, ஊர்காவற்றுறை.

★ 210830200 V — அன்ரனிப்பிள்ளை கஸ்மிர் யோசப் — பற்றிக் வீதி, குருநகர்.

## குருநகருக்கு மீண்டும் மின்சாரம்

குருநகர் பகுதிக்கு கடந்த சனிக்கிழமை தொடக்கம் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டுவருகின்றது.

கடந்த சில வாரங்களாக இப் பகுதிக்கு மின்சாரம் இடைநிறுத்தப்பட்டு இருந்தது.

தொடர்ந்து இப்பகுதியில் உள்ள பொது அமைப்புகளும் பொது மக்களும் எடுத்த முயற்சியினால் மீண்டும் இப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது [இ-51]

பாலம்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு அண்மையில் உறுகாமத்துக் குளத்துடன் தொடர்புடைய ரேடியேற்றர் கேட் இருக்கிறது. (இ-3)

★ உங்கள் பிள்ளைகள் ஊனமடையாது தடுப்பது உங்கள் கடமையே.
★ போலியோவைத் தடுக்கும் சொட்டுமருந்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுங்கள்.
PolioPlus
எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை
உங்கள் பகுதி குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பிரிவில் உள்ள விசேட நிலையங்களுக்கு 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைக் கூட்டிச் செல்லுங்கள். மறந்துவிடாதீர்கள்!

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org